# கால்நடைகளில் வறட்சி கால தீவனப் பராமரிப்பு

இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் தீவனப் பற்றாகுறையும், தீவன உற்பத்தி பரப்பளவும் மிகவும் குறைந்து காணப்படுகிறது. மேலும் தமிழ்நாட்டின் பசுந்தீவன பற்றாக்குறை 85 சதவீதமும், உலர்தீவன பற்றாக்குறை 50 சதவீதமும் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடைகளின் முழுமையான உற்பத்தித்திறன் சரிவிகிதமான உணவின் மூலம் தான் பெற முடியும். மேலும் வறட்சிக் காலங்களில் தீவனப் பற்றாக்குறை அதிகம் காணப்படுவதால் பெரும்பாலான கால்நடைகள் விற்கப்படுகின்றன. கால்நடை வளர்க்கும் ஏழை விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். வறட்சிக் காலங்களில் தீவனப் பற்றாக்குறையை சமாளிக்க சில வழிமுறைகளை கடைபிடிப்பதன் மூலம் கால்நடைகளை பாதுகாக்கலாம்.

தீவனப் பற்றாக்குறை ஏற்படும் வறட்சி காலங்களில் கால்நடைகளின் உற்பத்தி அதிகம் பாதிக்காமல் இருக்க அந்த அந்தச் சமயத்தில் கிடைக்கக் கூடிய பல்வேறு வேளாண் உபபொருட்களை தீவனமாக அளிக்கலாம்.

## தானியங்கள் மற்றும் உபபொருட்கள்

உடைந்த இறுங்குச் சோளம், கேழ்வரகு. கம்பு, சாமை, கோதுமை, கொள்ளு ஆகியவற்றை மக்காச்சோளத்திற்கு பதிலாக 50 சதம் வரை தீவனத்தில் அளிக்கலாம். அரிசித்தவிடு, கோதுமைத்தவிடு, அரிசிக்குருனை, உளுந்து, பயறு, கடலை பொட்டு போன்றவற்றை கால்நடை தீவனத்தில் 50 சதம் வரை சேர்க்கலாம். விலைமலிவாக கிடைக்கும் தானிய உபபொருட்களை தீவனத்தில் கலப்பதால், தீவனச் செலவு மிச்சமாவதுடன் சத்துள்ள ஆகாரம் கிடைக்கிறது.

## வேளாண் கழிவுப்பொருட்கள்

கிழங்கு திப்பி, பருத்திக்கொட்டை, ஓடு நீக்கப்பட்ட புளியங்கொட்டை ஆகியவற்றை உடைத்து தீவனத்தில் சேர்க்கலாம்.

## கூளத்தீவனம்

அறுவடைக்கு பின் கிடைக்கும் வைக்கோல், சோளத் தட்டை, கம்புத்தட்டை, வேர்க்கடலை கொடி, காய்ந்த புல், சூரியகாந்தி செடி, மக்காச்சோளத் தட்டை ஆகியவற்றை தீவனமாக கொடுக்கலாம். சத்து குறைந்த இந்த உலர் தீவனங்களை, 4 சதவீத யூரியா கரைசல் தெளித்து சில நாட்கள் காற்று புகாமல் பாதுகாத்து வைப்பதன் மூலம், சத்துள்ள கூளத்தீவனம் கால்நடைகளுக்கு கிடைக்கும். யூரியா கொண்டு ஊட்டமேற்றிய தீவனத்தை ஆறுமாத வயதைக்கடந்த மாட்டிற்கு 4-5 கிலோவரை அளிக்கலாம். ஆடுகளுக்கு சோளத்தட்டையுடன் காய்ந்த உளுந்தஞ் செடி, துவரைச்செடி, நிலக்கடலைக் கொடி, கிளைரிசிடியா, மர இலைகள், கொடுக்காபுள்ளி மற்றும் கருவேல் அகியவை நல்ல உணவாகிறது.

## கரும்புச்சோகை மற்றும் சக்கை

கரும்புச்சோகை கால்நடைகளக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. கால்நடைகளுக்கு தினசரி 20-25 கிலோவரை அளிக்கலாம். கரும்புச்சோகையை சைலேஜ் முறையில் பதப்படுத்தி தீவனப் பற்றாக்குறையை போக்கலாம். சூரியகாந்தி செடி, விதை நீக்கிய சூரியகாந்திப்பூ அகியவற்றை சிறுதுண்டுகளாக வெட்டி கால்நடைகளுக்கு உணவாக வைக்கலாம். கருவேல், வேலிக்கருவேல், சவுண்டல் விதைகள், புளியங்கொட்டை, மாங்கொட்டை ஆகியவற்றை தீவனமாகப் பயன்படுத்தலாம். விதைகளை 20-30 சதம் வரை தீவனத்தில் சேர்க்கலாம்.

## மர இலைகள்

மர இலைகள் சத்துள்ள தீவனமாக அமைந்துள்ளது. அகத்தி சவுண்டல், கிளைரிசிடியா, கொடுக்காபுளி, வாகை ஆகியவற்றின் இலைகளில் புரதச் சத்து அதிகமாக உள்ளது. அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் விஷச்சத்து அற்ற கால்நடைகள் விரும்பி உண்ணும் மர இலைகளை கோடைகாலத்தில் அளித்து தீவனப் பற்றாக்குறையை போக்கலாம். மர இலைகளில் புரதச்சத்து அதிகமாகவும், எரிசக்தி குறைவாகவும் உள்ளதால் மர இலைகள் முழு தீவனமாக கால்நடைகளுக்கு அளிக்க கூடாது. எனவே மர இலைகளுடன் வைக்கோல், சோளத்தட்டை, கம்பந்தட்டை, கேழ்வரகுதட்டை போன்றவற்றையும் கோதுமை தவிட்டையும் சேர்த்து அளிக்க வேண்டும். மர இலைகள் பால் தரும் மாடுகளுக்கு ஒரு நாளுக்கு 10-15 கிலோ வரை அளிக்கலாம். மர இலைகள் தீவனமாக பயன்படுத்தும் போது பல வகையான மர இலைகள் கலந்து அளித்தல் வேண்டும். அகத்தி, வேம்பு, பூவரசன், கருவேல், குடைவேல், பலா, கொடுக்காபுளி, அரசன், உதியன், இலந்தை போன்ற மரங்களின் இலைகளையம் கால்நடைகளுக்கு அளிக்கலாம். மர இலைகளை தீவனமாக அளிக்கும்போது கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

- மர இலைகள் பிற புல் மற்றும் உலர்ந்த தீவனத்துடன் சிறிது சிறிதாக அளிக்க வேண்டும்.
- மர இலைகள் 6-8 மணி நேரம் வாட வேண்டும்.
- மர இலைகள் உலர வைத்து அதன் ஈரப்பதம் 15-20 சதம் கீழே உள்ள நிலைகளில் அளித்தல் நலம்.
- மர இலைகள் மீது 2 சதம் உப்பு அல்லது வெல்லக்கரைசலை தெளித்தால் உண்ணும் திறன் அதிகமாகும்.
- மல இலைகள் விரும்பி உண்ணாத கால்நடைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளின் அருகில் கட்டி வைத்து மர இலைகளை தீவனமாக அளிக்கலாம்.
- மாலை அல்லது இரவு நேரங்களில் தீவனமிட்டால் கால்நடைகள் நல்ல முறையில் உண்ணும்.

- கடும் வெயில் நேரத்தில் மேய்ச்சலுடன் அனுப்பக் கூடாது.
- நல்ல சுத்தமான குடிநீர் அளிக்க வேண்டும்.
- விஷச்சத்துள்ள தீவனப் பயிர்களை கால்நடைகளுக்கு கொடுக்கக் கூடாது.
- தீவனத் தட்டைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அளித்தால் கழிவுகள் குறையும்.
- மழையின்றி வாடும் இளம் சோளப்பயிரில் மாடுகளை விட்டு மேய்க்கக் கூடாது. ஏனெனில் சயனிக் அமிலம் உடனடியாக இறப்பு ஏற்படுத்தும்.
- முழு தீவனத்தையும் ஒரே நேரத்தில் அளிக்காமல் இரண்டு அல்லது மூன்று தடவை பிரித்து அளிக்கவும்.